# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10


**அறிவிப்பு**

காந்தி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு

காந்தி நிலையம்
உருத்திரபுரம்


மலர் 7 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 100) 1969 ஒக்ரோபர் | இதழ் 1[?]




தேசியக் குழு காந்தி நூற்றுண்டு விழாவை யொட்டி மாணவர்களுக்காக நடாத்திய போட்டியில் முதற் பரிசு பெற்ற வதுளை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பதின் மூன்று வயது மாணவன் தாரக்க செனவிரத்ன வரைந்த ஓவியம்.

★ காந்தி சேவா சங்கத்தின் ★

# காந்தி நூற்ருண்டு விழா நிர்மாணப் பணிகள்

காந்தி நூற்ருண்டு விழாவை முன்னிட்டு அகில இலங்கைக் காந்தி சேவாசங்கம் காந்தியடிகளின் சர்வோதயலட்சியத்திற்கமைய ஆக்கபூர்வமான திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இவை 1968 ஒக்ரோபர் 2ஆம் திகதிதொடக்கம் திட்டமிடப்பட்டு இப்போது சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியிலுள்ள அக்கராயன் குளத்தில் 300 ஏக்கர் காணியை அரசினரிடம் பெற்று காந்திக்கிராமம் அமைப்பதற்கான வேலை ஆரம்பமாகியுள்ளது. இவ்வாண்டு ஜனவரிமாதம் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ்நாராயண் அவர்கள்காந்திக்கிராமத்தில் அடிக்கல் நாட்டினர். இப்போது 25 ஏக்கர் காடு அழிக்கப்பட்டு உணவு உற்பத்தி நடைபெறுகிறது. இங்கு வருடந்தோறும் 100 இளைஞருக்கு கமத்தொழில் கைத்தொழில் பயிற்சி அளிக்கப்படும். காலக்கிரமத்தில் இங்கு கிராமிய பல்கலைக்கழகம் நிறுவப்படும்.

பரந்தன்—முல்லைத்தீவு தெருவிலுள்ள தருமபுரத்தில் 25 ஏக்கர்காணி அரசிடம் பெறப்பட்டுள்ளது. இப்போது ஒரு பகுதிக்காடு அழிக்கப்பட்டு குடிசை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வாழ்வின்றி அல்லற்படும் ஏழைப் பெண்களுக்கு வாழ்வுதரும் தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படும்.

கொழும்பு— இந்துக்கல்விச்சபை இரத்மலானையில் அளித்துள்ள இரண்டு ஏக்கர் நிலத்தில் சர்வோதய நிகேதனம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கதர் உற்பத்திக்கான பணிகள் நடைபெறும். இப்போது ஆதரவற்ற மாணவர்களுக்காக ஒரு இல்லம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம்வீடுகளில் சர்வோதய [பிடி-அரிசி] பாத்திரங்களை வைப்பதெனத்திட்டமிட்டுள்ளோம். இதுவரை இருநூறு இல்லங்களில் சர்வோதய பாத்திரங்கள் வைக்கப்பட்டு மாதந்தோறும் அரிசி சேர்க்கப்படுகிறது. 1970 ஜனவரி 30 ஆம் திகதி காந்தி நுற்ருண்டு விழா முடியு முன் ஆயிரம் வீடுகளுக்கு மேல் சர்வோதய பாத்திரங்கள் வைக்கப் படும்.

இதுவரை 20 சிரமதான முகாம்கள் வரைநடைபெற்றுள்ளன, 500 ஊழியர் பங்குபற்றினர்கள். சிரமதான முகாம் தொடர்ந்து நடைபெறுவதற்கு வசதியாக கிராமங்கள் தோறும் சிரமதானக் குழுக்கள் அமைக்கப் படுகின்றன.

மாதந்தோறும் காந்தீயம் [தமிழ்] சாந்திமார்க்கய [சிங்களம்] ஆகியவை வெளிவருகின்றன. மேலும் பல சர்வோதய நூல்களை மலிந்த விலையில் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. விரைவில் ஆங்கிலத்திலும் மாதந்தோறும் ஒருபிரசுரத்தை வெளியிட ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## செய்திகள்

சர்வோதய பாத்திரங்கள் மூலம் ஆகஸ்ட் மாதத்தில் 91 வீடுகளிலிருந்து 289 கொத்து அரிசியும் 7ரூபா81 சதமும் பெறப்பட்டது.

★ ★ ★ ★ ★

திருமதி. செல்லையா- சிவபாக்கியவதி அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னரின் மகள் திருமதி. போல் அவர்கள்சர்வோதயநிகேதனத்திலிருக்கும் ஆதரவற்ற மாணவர்களுக்கு உணவளித்தார்.

★ ★ ★ ★ ★

டக்டர் சரஸ்வதி- முத்துவேலு அவர்கள் சர்வோதய நிகேதனத்திற்கு வந்து மாணவர்களுக்கு உணவுப் பெருட்களை அன்பளிப்புச் செய்தார்.

**காந்தீயம்**

ஆண்டுக் கட்டணம் ரூ, 2

## வரவு செலவு

அகில இலங்கைக் சுாந்தி சேவா சங்க கொழும்புக்கிளை, சர்வோதய நிகேதனம். வரவு—செலவு அறிக்கை, (1968 ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 வரை,)

வரவு

| | ரூபா | சதம் |
|---|---|---|
| நன்கொடை | 774 | 60 |
| அங்கத்துவம் | 30 | 00 |
| சர்வோதயப்பாத்திரம் | 315 | 41 |
| நிதிஉதவிக் காட்சி | 2170 | 00 |
| தோட்டம் | 33 | 74 |
| பழைய பத்திரிகை | 1 | 25 |
| ஆகமொத்தம் | 3,325 | 00 |

செலவு

| | ரூபா | சதம் |
|---|---|---|
| உணவு | 972 | 65 |
| மாணவர் புத்தகங்கள் | 134 | 50 |
| வெளிச்சம் | 44 | 91 |
| பிரயாணம் | 62 | 12 |
| வைத்தியம் | 35 | 55 |
| உடை, சலவை | 23 | 99 |
| அச்சு உப கரணங்கள் | 43 | 50 |
| சிகை அலங்காரம் | 6 | 50 |
| தபால் | 26 | 50 |
| விழாக்கள் | 186 | 71 |
| கதர்த் தொழில் | 8 | 50 |
| எற்று—இறக்குமதி | 13 | 00 |
| சம்பளம் | 230 | 00 |
| சுகாதாரம் | 12 | 45 |
| காந்தீயம் பதிவு | 5 | 00 |
| கணக்குப் பரிசேதனை | 50 | 00 |
| தோட்டம் | 36 | 00 |
| நிதி உதவிக் காட்சி | 250 | 00 |
| கடன் | 1182 | 82 |
| ஆகமொத்தம் | 3,325 | 00 |

**வாசித்துவிட்டீர்களா**

**பனையும் பயனும் ரூ. 2**

**இனிக்கும் பதநீர் ரூ. 2**

விபரங்களுக்கு-
காந்தி நிலையம்.
உருத்திரபுரம்

## காந்தீயம் பற்றி லோக்சேவக்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான காந்தீயம் பற்றி தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் '' லோக் சேவக்'' என்ற பத்திரிகை கருத்து தெரிவித்துள்ளது. அது தனது கருத்தில் ஈழத்திலிருந்து வரும் காந்தீயம் பாரத காந்தி பக்தர்களுக்கு ஒரு படிப்பினை என்று கூறியுள்ளது. இதோ அதன் முழு விபரம்;

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு வரப் பெற்றோம். காந்தி பிறந்த பாரதத்தில் அவரின் பிரதம சீடர் முதல் அவர் பேரைச் சொல்லிப் பிழைக்கவிழையும் பக்தர்கள் உள்பட சர்வோதயம் சாஷலிஸம், ஜனநயாக சோஷலிஸம் என்று கூறுகிறார்களே யொழிய காந்தி கூறிய அகிம்சா வாதம் என்று கூட கூறத் துணிவில்லாத இன்றைய நிலையில் இலங்கை காந்தி பக்தர்கள் தைரியமாகக்காந்தீயமென்றே சர்வோதயததைக் கூறிகாந்தீயம்என்றதிங்கள்இதழ்வெளியிடத் துணிந்தது பாரத காந்தி பக்தர்களுக்கு ஒரு படிப்பினையகும் வாழ்க காத்தீயம்! வாழிய அஹிம்சாவாதம்!!

## சிரமதான முகாம்

காந்தி நூற்றூண்டு விழாவை முன்னிட்டு 1969 ஒக்ரோபர் 2ஆம் திகதி இரத்மலானை, சர்வோதய நிகேதனத்தில் விசேட "சிரமதான முகாம் நடைபெறும். இதில் பங்கு பற்றவிரும்பும் அன்பர்கள் கௌரவ செயலாளர், சர்வோதய நிகேதனம், இந்துக்கல்லூரிச் சதுக்கம், இரத்மலானை, என்னும் முகரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.

## சர்வோதய நிகேதன கட்டட நிதி

காந்தி நூற்றூண்டுவிழா ஞாபகார்த்தமாக இரத்மலானை-இந்துக் கல்லூரிச் சதுக்கத்தில் நிறுவப் பெற்றுள்ள சர்வோதய நிகேதன கட்டட நிதி.

| | ரூபா | சதம் |
|---|---|---|
| ஏற்கனவே வசூலான தொகை | 4886 | 00 |
| திரு. ஆவுடையப்பன் ஸ்ரீவெங்கடேஸ்வர வஸ்திராலயம்வெலிசறை | 125 | 00 |
| ஆக மொத்தம் | 5011 | 00 |

## வாசகர்களுக்கு ...

1968 ஒக்ரோபர் 2 ஆம் திகதி சர்வோதய நிகேதனத்தில் நடைபெற்ற மகாத்மாகாந்தியடிகளின் 99 ஆவது ஜயந்தி விழாவின் போது மெய்கண்டான் அதிபர் திரு. நா.இரத்தினசபாபதி அவர்கள் வழங்கிய அச்சு உபகரணங்களின் உதவியுடன் சர்வோதய நிகேதன மாணவர் களுக்கு அச்சுத்தொழிலில். பயிற்சி அளித்து வருகிறோம் இதன் பயனாகக் 'காந்தியம்' மாதந்தோறும் அச்சுவாகனம் ஏறி வருகிறது. கடந்த காலங்களில் சர்வோதயக் கருத்துக்களைப் பரப்புவதற்குக் காந்தீயம் பெருமளவில் பணிபுரிந்துள்ளது. காந்தியடிகளின் நூற்றூண்டு ஜயந்திவிழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் காந்தீயம் எட்டுப்பக்கங்களுடன் வெளிவருவது சர்வோதய இயக்கத்தின் வளர்ச்சிக் குறைன்றுகோலாகும். அச்சுயந்திரம் ஒன்று இல்லாதது பெருங்குறையாகும். பொது மக்களின் ஆதரவுடன் இக்குறையை வெகுவிரைவில் தீர்த்து விடமுடியு மெனநம்புகிறோம். ஆகவே, ஒவ்வொரு அன்பர்களையும் சர்வோதய அச்சக நிதிக்கு இயன்றளவு உதவுமாறுபணிவன்புடன் வேண்டுகிறோம். வணக்கம்

# மகாத்மா காந்தி நூற்றூண்டு விழா

2. 10. 1969

பொதுக் கூட்டங்கள்

கொழும்பில்

சுகததாஸ விளையாட்டு அரங்கில்

சிறப்புச் சொற்பொழிவாளர்

**விஜயலட்சுமி பண்டிட்**

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யாழ்பாணத்தில்

யாழ்—முற்ற வெளி மைதானத்தில்

சிறப்புச் சொற் பொழி வாளர்

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

அனைவரும் திரண்டுவருக !

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலை பேசி: 254
கிளிநொச்சி.
காந்தி ஆண்டு 100
1969 ஒக்ரோபர்

# காந்தி நூற்றாண்டு

காந்தி நூற்றாண்டு என்று ஏன் நாம் ஒரு விழாவை அமைத்துக்கொண்டாட வேண்டும்? காந்தியார் ஓர் இந்தியர் இந்து சமயத்தவர் என்பதற்காகவா? அல்லது மற்றைய நாட்டவர் தம் பெரியோர்களைக் கொண்டாடுகின்றனர் அதனால் நாமும் ஒரு வரைக்கொண்டாட வேண்டுமென்பதற் காகவா? இந்த அமிசங்களும் நம்மை ஊக்குகின்றன என்பது உண்மையே. ஆயின் இப்பெரிய வரின் பிறந்த நாளை நாம் கொண்டாடுவதற்கு நியாயமான காரணம் ஒன்றே ஒன்றுதான் உண்டு.

நல்லாரைக் காண்பதும், நல்லார் சொற் கேட்பதுவும், நல்லாரோடு இணங்கி இருப்பதுவும்எல்லாம் நன்று என்று நாம்எல்லோரும் சிறு வயதில் கற்றிருக்கிறோம். இன்னும் பெரியவர்களை எம்மவராக்கி அவர்சொற் கேட்டு நடத்தலும் நல்லது என்றும் நாம் கற்றிருக்கிறோம். எனவே மகாத்மாவின் நூற்றாண்டுத் தினத்தை நாம் கொண்டாடுவது ஒரு சிறப்பு வழி பாடு எனக் கொள்ளல் வேண்டும்.

பெரியஉயர்ந்த இலட்சியங்களைக் கடைபிடித்தலுக்கு ஆண்டும் நாளும் கிடையாது. என்றும் எப்பொழுதும் நாம் நல் இலட்சியங்களைமனதில் இருத்தியே ஒழுகல் வேண்டும். அதிற் சந்தேகமில்லை, ஆயின் மனித இயல்பு என்றும் எந்நேரமும் உயர்ந்த, தூய வாழ்வு வாழ்வதற் கேற்ற சந்தர்ப்பங்கள் கொண்டு அமைந்து விடுவதில்லை. சில வேளைகளில் நம் இயல்பின்மையினாலும் சந்தர்ப்பக் கோளாறுகளினாலும் சில வாழ்வைக் கடைபிடிக்க முயலாதவர்களாகி விடுகிறோம். பிறர் நலத்தை இம்மியேனும் கருதாது சுயநலமே பெரிய அறம் என்று வாழ்ந்து விடுகின்றோம். இந்த எங்கள் மறதிகளைப் போக்கவும், தைரியமாக அறங்களை மனதில் இருத்தி உறுதியாக அவற்றைக் கடைப் பிடிக்கவுமே சிறப்பு நாட்களை அமைத்துப் பெரியோர்களைப் போற்றுகிறோம்.

மகாத்மாகாந்தியின் நூற்றாண்டில் மற்றைப் பெரியோர்களிடம் காணா உயர் நலம் எதனைக் கண்டோம்? இந்த நூற்றாண்டில் அவர் உயர் கருத்துக்களுள் எதனைப்பின்பற்றலாம்? நம் இயல்புக்கு எதுஇயைந்ததோஎம்மால் எதனை மனப்பக்கு வத்தோடு கடைப்பிடித்து ஒழுகமுடியுமோ, அதனைத் தேர்ந்தெடுத்துக் கடைப் பிடித்தல் நலம்.

அவர் வாழ்வில் அமைந்த அறங்கள் பல. அவர் மக்கட்குச் செய்த பணிகள் பல, அவற்றுள் தலையாக நிற்பவை உள்ளத்தாற் பொய்யாது ஒழுகியதும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்ததுமாம். உள்ளத்தாற் பொய்யாது ஒழுகும் பொழுது மனதில் ஒரு பொய்யும் அமையாத ஒரு வாழ்வை நாம் காண்கின்றோம். உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று சொல்லாத, நடவாத ஓர் அற்புதத்தைக் காண்கின்றோம், இவ்வாறு நடத்தற்கு முதல் அடிப்படையாய் அமைவது சுயநலமின்மையே. இரண்டாவதாக அமைவது துணிவு, மகாத்மா காந்தி உண்மையை எவ்வளவு உயர்வாகக் கருதினார் என்பதை அவர்தம் சுயசரிதைக்கு, அளித்த பெயரிலிருந்தே அறியலாம். அதனைச் சத்திய சோதனை என்றார்.

அடுத்து, உள்ளத்தில் பொய்யாது ஒழுகினால்போதாது, மற்றையவர்பால் அன்பு பூண்டு ஒழுக வேண்டும் மென்பது குறிக்கோள். தன்னைத்தான் தூய வனுக்குவதோடு நின்று விடாது மற்றையவர் பால், அன்பு பூண்டு அவர் துயரைத் துடைக்க நாம் பணியாற்ற வேண்டும். மகாத்மா காந்தியடிகள் இதையே தம் வாழ் நாளிற்குறிக்கோளாகக் கொண்டார். அதனால் தான் சத்தியாக்கிரகம், சர்வோதயம் என்ற இரு தத்து வங்களையும் உலகினுக்கு அளித்தார்.

அவரின்பல் வேறுபட்ட வாழ்க்கையிலிருந்து, உண்மை, அன்பு, பணி என்ற மூன்று அம்சங்களையும் நாம் எடுத்துச் சிந்திப்போமாக

## அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம்

தலைவர்: முதலியார்
செ. சின்னத் தம்பி
குஞ்சித சரணம், வட்டுக்கோட்டை.

உப தலைவர்கள்:
திரு. இ. கந்தையா
அன்பகம், கொக்குவில்.
திரு. ஆ. ம. செல்லத்துரை,
வதிரி, கரவெட்டி.

பொதுச் செயலாளர்:
திரு. சி. க. வேலாயுத பிள்ளை
காந்தி நிலையம், உருத்திரபுரம்.

உதவிச் செயலாளர்:
திரு. கா. நாகலிங்கம்
உருத்திரபுரம்

பொருளாளர்.
திரு. இ. வேலாயுதர்
கைதடி வடக்கு, கைதடி

நிர்வாகசபை
திரு. தி. க. இராஜசேகரன்
தெல்லிப்பழை
திரு. சோ. க. தம்பிப் பிள்ளை
47 ஆவது ஒழுங்கை, கொழும்பு
திரு. சி. பரநிருபசிங்கம்
நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம்
திரு. தி. முருகேசம் பிள்ளை
கச்சேரி, யாழ்ப்பாணம்
திரு. கு. நேசையா
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்
பண்டிதர். அ. ஆறுமுகம்
பண்ணாகம், சுளிபுரம்
பண்டிதர். செ. துரைசிங்கம்,
நீர்வேலி,
வித்துவான். நா. சிவபாதசுந்தரம்
தொல்புரம், சுளிபுரம்
செல்வி. பி. ஆறுமுகம்
இந்துமகளிர் கல்லூரி, மானிப்பாய்.

## அன்பளிப்பு

கொழும்பு — பழைய சோனகத் தெரு, ஏ. கே. சங்கரன் கம்பனி உரிமையாளர் திரு. கந்தசாமி அவர்கள் சர்வோதய நிகேதனத்தில் கிணறு கட்டுவதற்காக 15 மூடை சிமெந்தை அன்பளிப்புச் செய்துள்ளார்.

நூற்றாண்டு வருடமாகிய இந்த ஆண்டில் அப் பெரியாரின் வாழ்நாளைப் பற்றி நாம் சிந்திப்பதால், பேசுவதால் எங்களிலும் அவ்வுயரிய குறிக்கோள்களின் சிறு அமிசங்கள் உறையும். அவ்வளவிற்குஉலகம் நல்வழியில் இலங்கும்

**—இ. இரத்தினம்.**

# காந்தி நூற்றுண்டு விழா

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

### கொழும்பு நிகழ்ச்சிகள்

28. 9. 69

நண்பகல்: அடிகளாரை இரத்மலானை விமான நிலையத்தில் வரவேற்றல்

பி. ப.

12—30 இரத்மலானை சர்வோதய நிகேதனத்திற்கு வருகை தரல்

1—00 பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோயிலை அடைதல்

3—00 உறை விடத்தில் பத்திரிகை நிருபர் மகாநாடு.

6—30 பொதுக் கூட்டம்: விவேகானந்த மகாவித்தியாலயம்

8—30 கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் சொற் பொழிவு

(கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம்)

9—30 உறைவிடத்தில் பிரமுகர்களைச் சந்தித்தல்.

29— 9— 69

மு. ப.

8—30 பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலைக்கு வருகை தரல்

9—30 விவேகானந்த மகாவித்தியாலயத்திற்கு வருகை தரல்

பி. ப

4—00 பம்பலப் பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாதர் மகாநாட்டுச் சொற்பொழிவு ( கொழும்பு இந்து மகளிர் மன்றம் )

6—30 பகிரங்கக் கூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் (கொழும்பு தமிழ்ச்சங்கம், அனைத்து இலங்கை இந்து வாலிபர் சங்கம்)

8—00 செட்டியார் தெரு ஸ்ரீ முத்துவிநாயகர் கோவிலில் சொற் பொழிவு

(புறக் கோட்டை இந்து வாலிபர் சங்கம்)

காந்தி நூற்றுண்டு தினத்திற்காகவே இந்நிகழ்ச்சிகள் ஒழுங்காயின. அன்பர்கள் திரண்டுவந்து சுவாமிகளது சொற்பொழிவுகளைக் கேட்குமாறுவேண்டுகிறோம். விரும்பியவர்கள் இக்கூட்டங்களில் சம்பத்துத்தானமும் [நிதியுதவி] செய்யலாம்.



அடிகளார் சுற்றுப்பயணம்

செப்ரெம்பர்

30 திகதி வவுனியா, கிளிநொச்சி,

ஒக்ரோபர்

1 திகதி பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகம், சுன்னுகம், சுளிபுரம்

2 ,, யாழ்ப்பாணம் வசாவிழான்

3 ,, சிறுபான்மைத்தமிழர் மகா சபை, திருநெல்வேலி, சாவகச்சேரி, மானிப்பாய்,

4 ,, அராலி, மல்லாகம், அளவெட்டி,

5 ,, அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு,

6 ,, பருத்தித்துறை,

7 ,, திருக்கோணமலை,

8 ,, மட்டக்களப்பு, காரைதீவு [விபுலானந்தர்விழா]

9 ,, வதுளை, அப்புத்தளை, பண்டாரவளை,

10 ,, கல்கறனேயா கொட்டகலை, ஹட்டன் நோர்வூட்

11 ,, நாவலப்பிட்டி, உனுகல ஓயா

12 ,, கம்பளை, பேராதனை, மத்தளை, கண்டி.

### மணிவாக்கு

இயல்வது கரவேல் என்ற ஒரு முதுமொழி உண்டு. இதன் உண்மைப் பொருள் உணர்ந்தவர்கள் மிகச் சிலரே. தன்னிடம் உள்ளதை மறைக்காமல் கொடுக்க வேண்டும் என்பது மட்டும் இதன் பொருளல்ல. ஒருவன் யாசிக்கும் பொருள் நம்மிடம் இல்லாவிட்டாலும், நம்மால் முடியுமானால் பிறரிட மிருந்து பெற்றும் கொடுக்க வேண்டும் என்பதே இதன் பொருள்

—குன்றக்குடி அடிகளார்

காந்தி நூற்றுண்டு விழா

# தேசீய செயற் குழுவின் அறிக்கை

அலரி மாளிகையில் 8-9-69இல் நடைபெற்ற கூட்டத்தில் இணைச்செயலாளர் திரு. பாலித்த வீரசிங்க அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை.

தேசீயக்குழுவின் வேலைத்திட்டத்திலுள்ள விஷயங்களில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றுவதில் திருப்திகரமான முன்னேற்றம் கண்டுள்ளோம்.

1968 ஒக்ரோபர் 2 இல் பொரளையிலுள்ள பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் நிகழ்ந்த ஒரு கூட்டம் நூற்றுண்டு விழாவின் ஆரம்பமாக அமைந்தது. பெருந் தொகையான மக்கள் இக் கூட்டத்தில் பங்குபற்றினர். மேன்மைதங்கிய மா தேசாதிபதி அவர்கள் தலைமை தாங்கிய இக் கூட்டத்தில் பிரதமர் உட்பட பொது வாழ்வில் முக்கிய இடம் வகிக்கும் பலரும் உரையாற்றினர்கள்.

மகாத்மாகாந்தியின் 21 ஆவது மறைவு தினமாகிய இவ்வாண்டு ஜனவரி 30 ஆம் திகதி சரசுவதி மண்டபத்தில் சர்வமத நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்றது. இதனை ஒழுங்கு செய்து தந்த சமயப் பேரவைக்கு நாம் நன்றி உடையோம்.

தேசீயக் குழுவின் அழைப்பின் மீது இலங்கைக்குவந்தவர்களில் முதலானவர் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்களாகும். ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை இலங்கையில் தங்கிய இவருடன் திருமதி நாராயண் அவர்களும் கூட வந்திருந்தார்கள்.

பல சிரமதான திட்டங்களைப் பார்வையிட்ட அன்னர் கொழும்பு, கண்டி யாழ்ப்பாணம், தோட்டப் பகுதி ஆகிய இடங்களுக்குப் போயிருந்தார். அவர் சென்ற இடமெல்லாம் மகாத்மா காந்தியையும் அவரது கொள்கைகளும் பற்றி உணர்வூட்டும் பேருரைகளைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் குழுமினர்.

ஆரம்பத்திலிருந்தே கௌரவ கூட்டுப் பொருளாளராக இருந்த திரு. ஜே. எல். கங்குலி அவர்கள் இலங்கையை விட்டு பயண மானதின் விளைவாகத் தமது பதவியிலிருந்து விலகினர். திரு. கங்குலி அவர்கள் ஆற்றிய சேவை பற்றி தனது நயவுரைகளைச் செயற்குழு எழுத்தில் பொறித்து வைக்க விரும்புகிறது. நிதிதிரட்டுவதில் காட்டிய உற்சாகமும் நிதியைக்கவனமாகப்பேணியமையும் ஒரு புற மிருக்க அவருடைய தாராள சிந்தைக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். நாராயண் தம்பதிகளின் இலங்கைப் பயணத்தை ஒட்டிய இரு முகவிமானச்செலவுகளையும் இவரே பொறுபேற்ருர். அத்துடன் நில்லாது இந்தியாவில் இருந்து வரும் மேலும் மூவரது பிரயாணச் செலவுகளையும் ஏற்க உறுதியளித்துள்ளார்.

பதினைந்து காரியா திகாரிப் பிரிவுகளில் மாவட்டக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவும் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இயங்குகின்றது. தேசீயக்குழுவின் வேலைத்திட்டத்தை யொத்த தத்தம் சொந்த நிகழ்ச்சிகளை இவர்கள் நடாத்தி வருகிருர்கள். மாவட்ட குழுக்களின் பெருந் தொகையான கூட்டங்களில் தேசீயக்குழுவின் பிரதிநிதிகள் சமுகமளித்து உரையாற்றினர்.

இந்த மாவட்டக் குழுக்களை அமைப்பதில் காட்டிய ஊக்கத்திற்கும் நூற்றுண்டு விழா என்ற பொருள் பற்றி எமது தலைவர் மாகாண அதிபர்கள் மகா நாடு ஒன்றில் உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்கும் நாம் உள்நாட்டமைச்சுக்குப் பெரிதும் நன்றி உடையோம்.

தேசீயக் குழுவின் கிராம அபிவிருத்தித் திட்டம் லங்கா தேசீய சர்வோதய சிரமதான இயக்கத்தினல் நடை முறையாகப் படுகிறது. இந்த இயக்கம் உற்சாகத்துடன் நடைபெறுகிறது. ஆரம்பத்திலே 100 கிராமங்களில் இந்த நூற்றுண்டுவிழாக் காலத்தில் கவனஞ் செலுத் துவதென ஆரம்பித்த போதிலும் இயக்கம் மேலும் வளர்ந்து 152 கிராமங்களில் கவனஞ் செலுத்துகிறது.

மகாத்மாவின் போதனைகளையும் சாதனைகளையும் இந்நாட்டு இளைஞர்களுக்கு ஊட்டும் திட்டத்தைக் கல்வி அமைச்சு செயற் படுத்துகிறது.

ஒக்ரோபர் 2 ஆம் திகதி நிகழும் மா பெரும் கூட்ட மொன்றில் திருமதி விஜலட்சுமி பண்டிற் "கல்வியில் தொழில் அனுபவம்" என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்.

"எல்லோரும் சோதரரே" என்ற நூலினதும் மகாத்மாகாந்தியின் சத்திய சோதனையும் சிங்களத்தில் மொழி பெயக்கப்பட்டு அச்சகத்தில் இருக்கின்றன.

எதிர் பார்த்த 100 நூல் தொகுப்புகளுக்கும் பதிலாக 50 தொகுப்புகளையே இந்திய தூது வராலயம் எமக்குப் பெற்றுக் கொடுக்க முடிந்தது. இவை பல நூல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மகாத்மாவின் மணிமொழிகளைப் பிரசுரித்து பத்திரிகைகள் மூலம் காந்திஜீயின் கருத்துக்களைப் பரப்பும் முயற்யில் தாம் ஏற்கனவே ஒப்பந்தஞ் செய்து கொண்ட பத்திரிகைப் பத்திகளில் ஒரு பகுதியை, எமக்கு தந்து உதவும் படி வழக்கமாகப் பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யும் பிரபல கொம்பனிகளை எமது தலைவர் கேட்டிருந்தார். இந்த வேண்டு கோளுக்கு இடமளித்த பெருந் தொகையான கொம்பனிகளுக்கு நாம் நன்றி உடையோம். இருந்தும் ஒரு பத்திரிக்கைக் கொம்பனி தெரிவித்த மறுப்புக் காரணமாக இக்கொம்பனிகளின் ஆதரவை நாம் நிறைவாகப் பயன் படுத்த முடியவில்லை.

(7-ம்பக்கம் பார்க்க)

## சம்பத்து தானம்

சர்வேதய நிகேதனத்தில் இருக்கும் ஆதரவற்ற மாணவர்களின் செலவுக்காக சம்பத்துத் தானம்அளித்தவர்கள்

| | ரூபா | சதம் |
|---|---|---|
| திருமதி. தி. போல், 32 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை | 20 | 00 |
| திரு. மகேந்திரராசா மாவட்ட நீதிமன்றம் வதுளை | 5 | 00 |
| திருமதி. பிலிப் 47.ஆவது ஒழுங்கை வெள்ளவத்தை | 5 | 00 |
| திரு. என். சிவசுப்பிரமணியம் 53. டக்டர் ஈ, ஏ. குரே மாவத்தை வெள்ளவத்தை | 5 | 00 |
| திரு. இராமலிங்கம் மருதானை | | 50 |

(6 ஆம் பக்கத்தொடர்ச்சி)

சுதந்திர பத்திரிகைக் கொம்பனியின் பத்திரிகைகள் பலமாதங்களாக தமது ஆசிரியப் பத்தி களில்தினமும் மகாத்மாவின் பொன்மொழி ஒவ்வொன்றைப் பிரசுரித்து மனமுவந்தெமக்கு ஆதரவளித்தது. இத்தாராளத்தைப் பெரிதும்பாராட்டுகிறோம்.

உள் நாட்டிறை வரிச்சட்டத்தின் கீழ் அங்கிகாரம் பெற்ற தர்மம் என எமது நிதி பிரகடனப் படவேண்டுமென்ற செயற் குழுவின் வேண்டுகோளுக்கு நிதி அமைச்சர் சாதகமான பதிலை உடனடியாக வழங்கினார். நாங்கள் விண்ணப்பம் அனுப்பிய ஒரு சில தினங்களுள் இப்பிரகடனத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்த அவருக்கு நாம் பெரிதும் நன்றி உடையோம்.

நிதி தேடுவதுடன் நில்லாது இவ் விழாக்களில் பொது மக்களின் ஆவலை ஊக்குவிக்கும் முகமாக செயற் குழு கொடித்தினத்தை நடத்தத்திர்மானித்தது. இத்தினம் கொழும்பில் 9 .9. 69 இல் நடக்கும். திருமதி தோமஸ் அமரசூரிய அவர்களின் தலைமையில் பெண்கள் குழு இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

வெளி மாகாணங்களில் கொடித் தினத்திற்கு பிரதேச குழுக்கள் பொறுப்பாக இருக்கும். சிலஇடங்களில்கொடித் தினம் 9. 9. 69 இல் நிகழும். சில இடங்களில் அதன் பின்னர் நிகழும் தேவையான கொடிகளையும் ஏனையவற்றையும் தேசியக் குழு கொடுத்துதவியுள்ளது. தோட்டப் பகுதிகளிலுள்ள முக்கிய தொழிற் சங்கங்கள் தமது உறுப்பினர் ஒவ்வொரு வரும் ஐம்பது சதம் கொடுத்து உதவவேண்டுமென வேண்டு கோள் விடுத்துள்ளன. இத்தொகை சம்பளப் பட்டியலில் இருந்து திரட்டப்படும்.முதலாளிகளின் சம்மதத்துடன் நிகழும் இவ்வேற்பாட்பாட்டிற்குந் தொழில் ஆணையாளரின் அங்கீகாரம் உண்டு.

## வறட்சி உதவி நிதி

சென்ற எட்டு மாதங்களாகக் கிளிநொச்சிப் பகுதியில் மழையின்மை காரணமாகக் கடும் வறட்சி ஏற்பட்டமையால் இங்கு நிறுவப் பெற்ற காந்தி நிலையத்திலுள்ள இரண்டு கிணறுகளும் முற்றாக வற்றி விட்டன். இதனால் நிலையத்திலுள்ள 50 பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வேண்டிய நீரை ஆழக் கிணற்றை வெட்டுவதன் மூலம் பெறத்திட்டமிட்டு இதற்கு 3000 ரூபாவரை உதவுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தோம். இதுவரை நிதி உதவியவர்களின் பெயர்களை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

| | ரூபா | சதம் |
|---|---|---|
| இராம கிருஷ்ண மிஷன் வெள்ளவத்தை. | 500 | 00 |
| யாழ். ஐக்கியவியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம். | 50 | 00 |
| திரு. மு.அம்பல வாணர் பம்பலப்பிட்டி | 15 | 00 |
| சினிமாஸ் லிமிட்டெட் கொழும்பு. | 10 | 00 |
| சுவாமிசைதன்யானந்தா ஞாபகம் (சகோதரர்) | 25 | 00 |
| திரு. எம்.ரி. சுப்பிரமணியம் | 25 | 00 |
| திரு.வி. வயித்திலிங்கம் மாதகல் | 20 | 00 |
| ஓர் அன்பர் | 5 | 00 |
| செ. இராசரத்தினம் காரை நகர் | 5 | 00 |
| வ. இராசநாயகம் வசாவிளான் | 10 | 00 |
| கொழும்பு இந்து மகளிர் மன்றம் | 100 | 00 |
| வெ. மகாலிங்கம் வல்வெட்டித்துறை | 5 | 00 |
| பண்டாரவளை இந்து பரிபாலன சங்கம் | 100 | 00 |
| விவேகானந்த சபை கொழும்பு | 101 | 00 |
| ஆக மொத்தம் | 971 | 00 |

**இளைஞர்களே !**

உங்களுக்குத் தொழில் இல்லையென

**கவலை ஏன் ?**

- ★ கமம்
- ★ நெசவு
- ★ தும்பு
- ★ அச்சு
- ★ தையல்
- ★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.

விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்
உருத்திரபுரம் (தபால்)
அல்லது
சர்வோதய நிகேதனம்
இந்துக் கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை.


காந்திய—சர்வோதய
தத்துவங்களை அறிவதற்கு
**கிராமராஜ்யம், சர்வோதயம்**
ஆகிய பத்திரிகைகளைப்
படியுங்கள்.
காந்தி நிலையம்
உருத்திரபுரம்

பனைச்செல்வம்
(திங்கள் வெளியீடு)
தனிப் பிரதி சதம் 50.
சென்னை மாநிலப் பனை வெல்லக்
கூட்டுறவு சம்மேளனம்
52, கெங்குரெட்டி தெரு
எழும்பூர், சென்னை 8.
இலங்கையில்:
காந்தி நிலையம்
உருத்திரபுரம்

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் சர்வோதய அச்சக உபகரணங்களின்உதவியுடன் கொழும்பு மெய்கண்டான்அச்சக லிமிட்டெட்டில்அச்சிடப்பட்டது.

# தேசீய சேமிப்பின்

## அளப்பரிய நன்மைகள்



உங்களுடைய முன்னேற்றத்துக்கும்
உங்கள் நாட்டு முன்னேற்றத்துக்கும்

**இலங்கை சேமிப்பு பத்திரங்களில்**
**வழங்கப்படுகிறது**

## நீங்கள் முதலீடு செய்யும்
## ரூ. 100

**10 வருடங்களில் ரூ. 150 ஆகப் பெருகிவிடுகிறது**

**எல்லா தபால் கந்தோர்களிலும் கிடைக்கும்**